CALEB JOSHUA
Tele : 04630 456157

" HOREB"
SRIVAIKUNTAM – 628 601.
THOOTHUKUDI DIST.

1963ல் எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டதா?

கிறிஸ்து இயேசுவுக்குள் பரிசுத்தமாக்கப்பட்டவர்களாயும், பரிசுத்தவான்களாகும்படி அழைக்கப்பட்டவர்களாயும் இருக்கிற தேவனுடைய சபைக்கும், எனக்கும் உங்களுக்கும் ஆண்டவராயிருக்கிற நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தை எங்கும் தொழுது கொள்ளுகிற அனைவருக்கும் எழுதுகிறதாவது:

நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

1. இந்நாட்களில் வெளிநாட்டிலிருந்து இந்தியாவுக்கு ஒரு போதகம் இறக்குமதி செய்யப்பட்டுள்ளது என்றும், அதன்படி 1963 ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 28ம் தேதி " ஏழு தூதர்கள் கூட்டம் " ஏழாம் சபை கால தூதனை சந்தித்த நாளில் கர்த்தருடைய இரகசிய வருகை அதாவது எடுத்துக் கொள்ளப்படுதல் நடந்து விட்டது என்றும், லவோதிக்கேயா சபை காலம் முடிந்து விட்டது என்றும், ஆதலால் இனி விசுவாசிகள் ஞானஸ்நானம், கர்த்தருடைய இராப்போஜனம், கால்களைக் கழுவுதல் போன்ற தெய்வீக நியமங்களை ஆசரிக்க வேண்டியது இல்லை எனவும், கிறிஸ்து நமக்குள் இருப்பதால் இனி விசுவாசிகள் உபவாசித்து ஜெபிக்க வேண்டியது இல்லை எனவும் போதித்து வருவதாக கேள்விப்பட்டேன். இந்தப்போதகத்தை இந்தியாவுக்கு கொண்டு வந்த வெளிநாட்டினருக்கு சென்னை பாஸ்டர் எட்வர்ட் அவர்களும், புதுக்கோட்டை (திருச்சி), முன்னாள் நம அய்யா ஸ்ரீ குருதேவ் லஹரி முத்துக்கிருஷ்ணன் பாலாசீர் லாறியின் மணவாட்டியும், கனடா நாட்டு முதலாளி திரு. எட்பிஸ்கல் அவர்களின் இந்திய கைக்கூலியுமாகிய பாஸ்டர் ஜெயராஜ் அவர்களும் இந்தப் போதகத்தை பல இடங்களுக்கு எடுத்துச் செல்வதாகவும் பல விசுவாசிகள் முலம் அறியவந்தேன்.

2. இது குறித்து கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்தி விருத்தி அடைவதற்காக, சபைக்கு தலையாயிருக்கிற கிறிஸ்துவினால் சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவனாகிய நான் எழுதுகிறதாவது:

நாம் வாழ்ந்து கொண்டிருக்கும் காலம் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும், பிசாசுகளின் உபதேசங்களுக்கும் செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போகும் காலம். 1தீமோ.4:1. ஆதலால் மனுஷருடைய சூதும் வஞ்சிக்கிறதற்கேதுவான தந்திரமுள்ள போதகங்கள் பல நம்மத்தியில் உண்டு.எபே.4:14. அப்படிப்பட்டதான மாயையான போதகங்களில் இதுவும் ஒன்று இப்படிப்பட்டதான போதகங்களுக்கு ஆதரவு கொடுத்து, வெளிநாட்டினருக்கு கைக்கூலியாக இருப்பவர்கள் பொதுவாக நாராயண

பகவானின் பத்தாவது அவதாரம் எனப்படும் பாலிசீர்லாறியின் முன்னாள் மணவாட்டிகளே.

3. **இயேசு** : ஒருவனும் உங்களை வஞ்சியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். மத் 24:4. **அப்போஸ்தலர்கள்** : நீங்கள் ஒருவராலும் வஞ்சிக்கப்படாதீர்கள். 1யோ.3:7. எவ்விதத்திலும் ஒருவனும் உங்களை மோசம் போக்காதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். 2தெச.2:3. **ஏழாம் சபை தூதன்** : சத்துரு நம்மை வஞ்சிக்கும் இந்நாட்கள் போன்று இதுவரை எக்காலத்திலும் இருந்ததில்லை. இது பிசாசுகளின் தந்திரமும், வஞ்சகமும் நிறைந்த நாட்களாகும். இந்நாட்களில் கிறிஸ்தவர்கள், முற்காலத்தில் வாழ்ந்த கிறிஸ்தவர்களைக் காட்டிலும் அதிக கவனமாயிருக்க வேண்டியது அவசியம். தற்காலத்தில் பிசாசுகளின் வஞ்சகம் கிறிஸ்தவர் அல்லாதோர் தங்களை கிறிஸ்தவர் என்று நம்பும்படி செய்யும். (சாத்தானின் ஏதேன். பக்கம் 7, கடைசி பத்தி : பக்கம் 8, பத்தி 2. செய்தி நாள் 29. 8. 1965). அவ்வண்ணமாகவே இக்கடைசிக்கால செய்தியில் அல்லாதோர் தாங்கள் செய்தியில் உள்ளவர்கள் என்று பிசாசுவின் வஞ்சகம் நம்பும்படி செய்யும்.

4. ஏழாம் சபை தூதனும், தீர்க்கத்தரிசியுமாகிய வில்லியம் மாரியன் பிரன்காம் 30.12.1962ல் " ஐயன்மீர், இதுவா சமயம்? " என்ற செய்தியை பிரசங்கிக்கும் போது, எட்டு நாட்களுக்கு முன்பு தான் " **ஏழு தூதர்கள் கூட்டம்** " குறித்து ஒரு தரிசனம் கண்டதாகக் கூறினார். இதை பக்கம் 39 முதல் 43 வரை வாசிக்கலாம் பின்பு இந்த தரிசனம் 28.02.1963 ல் சகோ.பிரன்காம், சகோ.பிரட் சோத்மேன் வுடன் **சூரிய அஸ்தமனம்** சிகரத்திற்கு வேட்டைக்கு சென்ற போது அங்கு நிறைவேறியதாக கூறுகிறார். இதை நீங்கள் 25.07.1965ல் பிரசங்கித்த மலைபின் மேலுள்ள கவர்ச்சி என்ன? என்ற செய்தியில் பத்தி 135 முதல் 152 வரை வாசிக்கலாம்.

5. **ஏழு தூதர்கள் கூட்டம்** -- நோக்கம் என்ன? இதை அறிய வெளி.10:3 & 4 வசனங்களை தியானிப்போம்.

அ. பலமுள்ள வேறொரு தூதன் சிங்கம் கெர்ஜிக்கிறது போல மகாசத்தமாய் ஆர்ப்பரித்தான்.

ஆ. அவன் ஆர்ப்பரித்த போது ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின.

இ. அந்த ஏழு இடிகளும் சத்தமிட்டு முழங்கின போது யோவான் எழுத வேண்டுமென்றிருந்தான்.

ஈ. அப்பொழுது ஏழு இடிமுழக்கங்கள் சொன்னவைகளை எழுதாமல் முத்திரை போடு என்று வானத்திலிருந்து ஒரு சத்தம் உண்டாயிற்று.

உ. அந்த ஏழு இடிகளும் தங்கள் சத்தத்தை முழங்கின. அந்த சத்தத்தின் முழக்கம் யாருடையது?.

ஊ. மகிமையுள்ள தேவன் முழங்குகிறார். சங். 29:3. பலத்த இடிமுழக்கம் தேவனுடைய சத்தம் (ஏ.மு. பழைய பதிப்பு பக்கம் 142) தேவனுடைய சத்தம் இடிமுழக்கம் போன்றதாகும். (ஏ.மு. பக்கம் 143)

ஐ. ஏழு இடிமுழக்கங்களுக்கும் ஏழு தூதர்களின் கூட்டத்திற்கும் உள்ள சம்பந்தம் என்ன?

ஏழு இடிமுழக்கங்களை அந்த ஏழு தூதர்களும் தங்கள் கைகளில் பிடித்திருந்தார்கள். இவர்கள் அந்த ஏழு இடிமுழக்கங்கள் சொன்னதை வெளிப்படுத்தித் தருவார்கள். (ஏ.மு.பக்கம் 19) பாருங்கள், 28.2.1963 அன்று சூரிய அஸ்தமனம் சிகரத்தில் தீர்க்கத்தரிசி கண்ட ஏழு தூதர்கள், அந்த ஏழு இடிமுழக்கங்கள் முழங்கின இரகசியத்தை உடையவர்களாயிருக்கிறார்கள். அவர்கள் தான் அந்த இரகசியத்தை தீர்க்கத்தரிசிக்கு வெளிப்படுத்திக் கொடுக்க வேண்டும். ஆக ஏழு தூதர்களின் கூட்டமே தீர்க்கத்தரிசிக்கு ஏழு இடிமுழக்கங்கள் என்ன சொன்னது என்பதின் இரகசியத்தை வெளிப்படுத்திக் கொடுப்பதற்காகவேயன்றி அது கர்த்தருடைய இரகசிய வருகை அல்ல.

6. இப்பொழுது கவனியுங்கள். மல்கியா 4 ம் அதி. வெளி. 10:7. உரைக்கப்பட்ட தாதன் இரு பெரிய காரியங்களை சாதிப்பார்.

அ. மல்கியா உரைத்தபடி இவர் பிள்ளைகளின் இருதயத்தைப் பிதாக்களிடத்திற்க்குத் திருப்புவார்.

ஆ. வெளி.10 அதி. கூறப்பட்டிருக்கும் ஏழு இடிமுழக்கங்கள் இரகசியத்தை அதாவது ஏழு முத்திரைகளின் இரகசியத்தை வெளிப்படுத்துவார். தேவனால் அருளப்பட்ட இந்த சத்தியம் பிள்ளைகளுடைய இருதயத்தை பிதாக்களிடத்திற்குத் திருப்பும். (ஏழு சபை காலம், பக்கம் 402, கடைசி பத்தி)

7. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகம், வெளி.10ம் அதி.ல் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும்.(ஏ.மு. பக்கம் 75)

8. ஒரு இடிமுழக்கம் உண்டானது. அது தேவனுடைய சத்தம் என்பதை யோவான் உணர்ந்தான். அவன் கண்ட காட்சியின் அர்த்தத்தை அவனால் புரிந்து கொள்ள இயலவில்லை. அவன் கண்டது, தேவன் சபைகளுக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரைக்கும் அனுப்பிய காட்சிகளாகும். அதன் அர்த்தத்தை வெளிப்படுத்த வேண்டிய தருணம் வரும்போது, அவர் அதை வெளிப்படுத்துவார். கடைசி சபை கால தூதன் செய்தி முழங்கும் போது இந்த இரகசியங்கள் அனைத்தும் வெளியரங்கம் ஆகும். (ஏ.மு.பக்கம் 146-147).

9. முதலாம் முத்திரை திறக்கப்பட்ட போது இடிமுழக்கம் உண்டாயிற்று. முத்திரை என்பது இடிமுழக்கம். புத்தகத்தின் உள்ளிருக்கிற முத்திரைகளில் முதலாம் முத்திரை ஒரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது. (ஐயன்மீர், இதுவா சமயம் : பக்கம் 67, 68, 69. செய்தி நாள் 30.12.1962)

10. முத்திரைகளின் இரகசியங்களை நான் அறிந்திருக்கவில்லை. அந்த ஏழு தூதர்களும் வெளியாக்கப்படவிருக்கும் ஏழு செய்திகளாக நான் அதை உங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கருதி அதற்கென்று என்னை இங்கு கொண்டு வந்தனர். (ஏ.மு. பக்கம் 501)

11. இதிலிருந்து நாம் அறிவதென்ன? ஏழு இடிமுழக்கங்கள் ஏழு முத்திரைகளாகும். ஏழு இடிமுழக்கங்களின் இரகசியத்தை அந்த ஏழு தூதர்களும் கொண்டிருந்தார்கள். அவர்கள் அதை ஏழாம் சபை கால தூதனுக்கு

வெளிப்படுத்திக்கொடுத்தார்கள். கூர் நுனி கோபுர அமைப்பில் வந்த தூதர்கள் அந்த கூர் நுனி கோபுரத்திற்குள் என்னை ஏற்றுக் கொண்டனர். தேவ இரகசியங்களை அவர்கள் மாத்திரமே அறிந்திருந்தனர். அந்த கூர் நுனி கோபுரத்திற்க்குள் அடங்கியிருக்கிற ஏழு முத்திரைகளின் இரகசியங்களை வெளிப்படுத்த வந்த தூதர்கள் தாம் அவர்கள். (ஏ.மு. பக்கம் 518)

12. அந்நாட்களில் 18.3.1963. முதல் 24.3.1983 வரை ஏழு நாட்களில் ஏழு முத்திரைகளின் இரகசியத்தை அந்த ஏழு தூதர்களிடமிருந்து ஏழாம் சபை கால தூதன் பெற்று சபைக்கு வெளிப்படுத்தினார்.

13. ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட அந்த புத்தகத்தை திறக்கவும், அந்த முத்திரைகளை உடைக்கவும் ஆட்டுக்குட்டியானவர் ஒருவரே தகுதியுடையவர். பாருங்கள் வானத்திலாவது பூமியிலாவது, பூமியின் கீழாவது ஒருவனும் அந்த புத்தகத்தை திறக்கவும், அதை பார்க்கவும் கூடாதிருந்தது. ஒருவனும் அந்த புத்தகத்தை திறந்து வாசிக்கவும் அதை பார்க்கவும் பாத்திரவானாக காணப்படவில்லை. ஏனென்றால் இது மனுஷகுமாரனுடைய ஊழியம். ஆதலால் தான் ஏழு தூதர்களின் கூட்டம் மனுஷகுமாரனை வெளி.1:13, 14 க்கு ஒப்பாக அவருடைய சிரசும், மயிரும் வெண்பஞ்சைப் போலவும் உறைந்த மழையைப் போலவும் வெண்மையாகக் காணும்படி சபை காலத்திற்கு வெளிப்படுத்தியது.

14. சூரிய அஸ்தமனம் சிகரத்தில் நிகழ்ந்த இந்த சம்பவத்தை தீர்க்கத்தரிசி வெளி. 10:1-7 ல் வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாகும், வெளி.10:1-7 உரைக்கும் மறைக்கப்பட்ட இரகசியம் கடைசி சபை காலத்திற்கு அளிக்கப்படும் கடைசி செய்தி என்றும் மேலும் லூக்.17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில் நிறைவேறுதலாகும் என்கிறார். இது சாயங்கால நேரத்தில் சாயங்கால வெளிச்சம் உண்டாகும் என்று சகரி. 14:7ல் பரலோகத்தின் தேவன் வாக்களித்ததின் நிறைவேறுதலாகும் என்கிறார்.

15. டீசான் நகரில் உள்ள பெரிய வானிலை ஆராய்ச்சி கூடங்களில் உயரத்தில் இருந்த அதை புகைப்படம் எடுத்திருக்கிறார்கள்.. அவ்வளவு உயரத்தில் வானத்தில் 30 மைல் உயரத்தில் மூடு பனியோ, காற்றோ, ஈரப்பசையோ கிடையாது. என்ன ஆச்சரியம்! உயர வானத்தில் அடையாளங்கள் காணப்படும், மேலும் இந்த காரியங்கள் நிகழும் போது பல்வேறு இடங்களில் பூகம்பங்கள் ஏற்படும், அப்பொழுது மனுஷகுமாரன் அடையாளம் வானத்தில் காணப்படும். அந்த நாளிலே லூக்கா 17 மனுஷகுமாரன் தம்மை மறுபடியும் வெளிப்படுத்துவார், அவர் தாமே வெளிப்படுத்தப்பட்டிருப்பார்... ஓ, சகோதரர்களே, ஆவிக்குரிய காரியங்களைப் பற்றி அறிவில்லாதிராதிருங்கள். பாருங்கள், வேதவாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்திய ஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே, வார்த்தையைக் குறித்து சாட்சிக் கொடுக்கிறவைகளும் இவைகளே. சத்தியத்தைக் குறித்தும், தேவன் இந்த மணி வேளையில் செய்கிற காரியங்களைக் குறித்தும் சாட்சிக் கொடுக்கிறவைகள் இவைகளே. (தேவ சித்தத்திற்குப் புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல் பக்கம் 52, பத்தி 167 செய்தி நாள் 18.7.1965)

16. இந்த ஏழு தூதர்கள் கூட்டம் குறித்து தீர்க்கத்தரிசி தனது செய்திகளில் எங்காவது இது ஏழாவது முத்திரையின் அரைமணி நேர அமைதல் நிறை வேறுதல் என்றோ அல்லது எடுத்துக் கொள்ளப்படுதல் என்றோ கூறவே இல்லை.

17. லூக். 17:30 இது கர்த்தருடைய வருகைக்கு அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பாக நடக்கும் சம்பவம். லூக் 17:30 கர்த்தருடைய வருகை அல்ல. இது குறித்து கீழ்கண்ட செய்திகளில் இருந்து நீங்கள் தெளிவு பெறலாம்.

சோதோமின் நாட்களில் நடந்தது போல, மனுஷகுமாரன் வருகையிலும் நடக்கும். மறுபடியுமாக தேவனுடைய ஆவி மாம்ச சரீரத்தில் இறங்கும்... தேவன் தமது வருகைக்கு முன்பாக மறுபடியும் மாம்ச சரீரத்தில் வெளிப்படுவார் என்று இயேசு வாக்களித்துள்ளார். அது பரிசுத்த ஆவி - தேவன் ஒருவரே, தம்மை வெளிப்படுத்தி மறுபடியுமாக லோத்தையும் ஆபிரகாமையும் வெவ்வேறாக பிரிக்கிறார். (தேவனுடைய வார்த்தை அவிசுவாசத்தினின்று முழுவதுமாக பிரிந்து வரும்படி அழைக்கிறது. பக்கம் 18 பத்தி 3 செய்தி நாள் 21.1.1964.

லோத் மாம்ச பிரகாரமான விசுவாசிக்கு அடையாளமாயிருக்கிறான். ஆபிரகாம் ஆவிக்குரிய உண்மையான விசுவாசிக்கு அடையாளாமாயிருக்கிறான்.

18. இயேசுவானவர், அவர் வரும்போது அவர் ஒரு தீர்க்கத்தரிசியாக இருக்கவேண்டியதாயிருந்தது. அதுசரி, இன்றைக்கே, இயேசுவானவர் மறுபடியும் வருகிறதற்கு முன்னே, இயேசு கிறிஸ்துவின் முழுமையான வெளிப்பாடானது மாம்சத்திலே வெளிப்பட வேண்டியதாயிருக்கிறது. (தற்கால நிகழ்ச்சிகள் தீர்க்கசரிசனத்தின் மூலமாய் தெளிவாக்கப்படுகின்றன. பக்கம் 63 பத்தி 233. செய்தி நாள் 6.12.1965).

19. லூக் 17:30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாள் ஊழியம் ஏழாம் சபை கால தூதன் மூலம் நிறைவேறுகிறது. மனுஷகுமாரன் வெளிப்படும் அதே நாளில் (வெளி. 10:1-7) ஏழாம் தூதனின் செய்தி முத்திரைகளை திறக்கும். ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அந்த தூதன் மனுஷகுமாரனை வெளிப்படுத்துகிறார்... ஏழாம் தூதன் மனுஷகுமாரன் அல்ல. ஆனால் அவர் மக்களுக்கு மனுஷகுமாரன் யார் என்பதை வெளிப்படுத்துகிறார். (கடைசி காலத்தில் ஆவியின் அபிஷேகம் பெற்றுள்ளவர்கள். பக்கம் 91 பத்தி 260 செய்தி நான் 25.7.1965).

20. மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் அப்படியே நடக்கும். லூக். 17:28-30. வெளிப்படுவது என்றால் என்ன? இந்த நாளில் இயேசு எவ்விதம் இருக்கிறார் என்பதை மக்களுக்கு உணர்த்துவதே. இந்த நாளைக்குரிய வார்த்தையானது பரிசுத்த ஆவியின் வல்லமையினால் வெளியரங்கமாக்கப்பட்டு, இயேசுவை மறுபடியுமாக நம்மத்தியில் வாழச்செய்கிறது. (எடுத்துக் கொள்ளப்படுதல் பக்கம் 38, பத்தி 1. செய்தி நாள் 4.12.1965) இந்த லூக் 17:30 ஐ குறித்துத் தான் தீர்க்கத்தரிசி 19.2.1965ல் தான் பிரசங்கித்த இந்த

வேதவாக்கியம் இன்றைய தினம் நிறைவேறிற்று. என்ற செய்தியில் 227 வது பத்தியில் கூறுகிறார்.

21. அவர் மூன்று நாமங்களில் வருகிறார் : மனுஷகுமாரன் - தீர்க்கத்தரிசி : தேவகுமாரன் - ஆவி : தாவீதின் குமாரன் - ஆயிரம் வருட அரசாட்சி. ஆனால் இதற்கிடையில், அவருடைய சொந்த வார்த்தையின் படி, மனுஷகுமாரன் வெளிப்படும் நாளில், எவ்விதம் தம்மை வெளிப்படுத்துவார்? தேவகுமாரனாக அல்ல, மனுகுமாரனாக. வேறு வகையில் தம்மை வெளிப்படுத்துவார். அது என்ன செய்கிறது? மல்கியா 4 ஐ உண்மையாகிறது. -- மல்கியா 4ல் கூறியுள்ளதை நிறைவேற்ற மறுபடியும் மனுஷகுமாரனாக வெளிப்படுவார். அவர் வாக்களித்துள்ள கடைசி சபை மணவாட்டி மரத்தை வெளியே இழுத்துக்கொள்ள அவ்விதம் செய்வார். கடைசி காலத்தில் வெளிச்சம் உண்டாகும். மரித்தோர் உயிர்த்தெழுதல் இருக்கும் அவர் அதை உறுதிப்படுத்துவார். அது உண்மை. அவர் அதை நிருபிப்பார். சபையின் எடுத்துக்கொள்ளப்படுதல் நிகழும். அது எப்படி முடியும்? எனக்குத் தெரியாது. ஆனால் அவர் அதை நிருபிப்பார். (அவருடைய வார்த்தையை நிருபித்தல் பக்கம் 81. பத்தி 221 : பக்கம் 85 பத்தி 232 செய்தி நாள் 16.08.1964)

22. எடுத்துக்கொள்ளப்படுதல் 1965 வரை நடைபெறவில்லை. தீர்க்கத்தரிசி கூட கர்த்தருடைய வருகையை / எடுத்துக்கொள்ளப்படுதலை எதிர்நோக்கிக் கொண்டு இருந்தார் என்பதை கீழ்க்கண்ட செய்திகள் மூலமாக அறிந்து கொள்ளலாம்.

அ. வாக்குதத்தம் பண்ணப்பட்ட குமாரனை பெற்றுக்கொள்வகற்கென, தேவன் ஆபிரகாம், சாராள் சரீரத்தை மாற்ற வேண்டியதாயிருந்தது. நாமும் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிற இந்த சரீரங்களில் நமக்கென இன்று வாக்குதத்தம் பண்ணப்பட்டுள்ள குமாரனை பெற முடியாது. இந்த சரீரங்கள் பாவமுள்ளது. சாராள் பெற்றிருந்த அந்த பழைய சரீரம் ஒரு குமாரனை பெறுவதற்காக மாற வேண்டியதாயிருந்தது. அதுபோன்று நம்முடைய சரீரமும் குமாரனை பெற்றுக்கொள்ள அதேவிதமாக மாறவேண்டும். (கேள்வி பதில் 362 - COD 2:21, பத்தி 245 - 250. நாள் 30.8.1964)

ஆ. சபை முழுவதும் சரியாயிருக்கும் வரை கிறிஸ்து வரமுடியாது. அவர் நமக்காக காத்துக்கொண்டிருக்கிறார். நாம் முடிவில் வந்துவிட்டோம் என நம்புகிறேன். (இதை அறியாமல் இருக்கிறாய். பக்கம் 70 பத்தி 4, செய்தி நாள் 15.8.1965)

இ. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை ஆழ்ந்த கருத்துக்களுக்கும், உயரிய நோக்கங்களுக்கும் வழிநடத்த நாங்கள் முயன்று வருகிறோம். அவருடைய வருகை சமீபமாயுள்ளது என்று நாங்கள் இன்னும் அதிகமாக விசுவாசிக்கிறோம்... இப்பொழுது நாம் நம்முடைய சந்ததியில் கர்த்தருடைய வருகையை எதிர்நோக்கி கொண்டிருக்கிறோம். நம்முடைய சந்ததியில் நான் எழுப்புதலை எதிர்பார்க்கவில்லை கர்த்தருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். (கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு. பக்கம் 9 பத்தி 2. செய்தி நாள் 25.11.1965).

ஈ. There is not another thing that I know to happen but the RAPTURE, the coming of the Lord Jesus Christ. It is all ready. (Does God changes His mind? Page 15, para 124 dated 27.4.1965)

உ. லூக் 17ம் அதி. 30ம் வசனத்தில் சோதோம் கொமோராவின் அழிவுக்கு முன்பாக அவர் செய்தது போலவே, கடைசி நாட்களிலும் மனுஷகுமாரன் தம்மை வெளிப்படுத்துவார்... லோத்தின் நாட்களில் நடந்தது போலவே மனுஷகுமாரன் வெளிப்படும் நாளிலும் நடக்கும் என்றார். கவனியுங்கள், மனுஷகுமாரன் ஆபிரகாமின் குழுவுக்கு ஒரு மனிதனாக, மாம்சரூபத்தில் தீர்க்கத்தரிசியாக, துணிகளில் அழுக்குப்படிந்த ஒரு சாதாரண மனிதனாக வெளிப்பட்டார்.

கடைசி நாட்களில் மறுபடியுமாக மனுஷகுமாரன் அதேவிதமான குழுவுக்கு, ஆபிரகாமின் ராஜரீக சந்ததிக்கு, அக்கினி விழுவதற்கு முன்பு வெளிப்படுவார். அதற்கு பின்பு சபையானது சாட்சிகள் எவரையுமே பெறவில்லை. ஆபிரகாமும் அவனை சேர்ந்தவர்களும் பெறவில்லை அதன் பின்பு அவர்கள் எதிர்பார்த்திருக்கிற வாக்குதத்தம் பண்ணப்பட்ட குமாரன் நேரடியாக கொண்டுவரப்பட்டான். சபையும் அவ்வாரே வாக்குதத்தம் பண்ணப்பட்ட குமாரனை எதிர்நோக்கியுள்ளது. **இந்த ஊழியத்தின் நாட்களுக்குப்பின்பு அவர் வருவார், அவர் வானங்களில் வெளிப்படுவார்.** (நான் கேள்விப்பட்டேன் இப்பொழுதோ காண்கிறேன். பக்கம் 37 பத்தி 112, 113. செய்தி நாள் 27.11.1965)

ஊ. அடுத்தபடியாக நடக்கயிருப்பது :

- சபை எடுத்துக்கொள்ளப்படுதல்
- மோசேயும் எலியாவும் திரும்ப வருதல்
- மணவாட்டியும் மணவாளனும் பூமியில் ஆயிரம் வருடகாலம் அரசாட்சி செய்தல்
- வெள்ளை சிங்காசன நியாயத்தீர்ப்பு
- பாவம் முழுவதுமாக அழிக்கப்படுதல்

(கேள்வி பதில் 339 COD 2:21 பத்தி 147 நாள் 30.8.1964)

23. எடுத்துக்கொள்ளப்படுதல் எப்படி நடக்கும்?

அ. கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்தில் இருந்து இறங்கி வருவார்.

அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்

பின்பு உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டு போக. மேகங்கள் மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்தக்கொள்ளப்பட்டு இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனே கூட இருப்போம் 1 தெச.4:13-17.

கர்த்தர் பிரசன்னமாகும் முன்பு மூன்று காரியங்கள் நிகழவேண்டும். அவையாவன **ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம். அவர் இறங்கி வரும் போது இவை மூன்றையும் அவரே செய்கிறார்.**

ஆரவாரம் என்பது செய்தியாகும். ஜனங்களை ஒன்று கூட்டுவதற்கென்று அளிக்கப்படும் செய்தியாகும். அப்பொழுது தீவட்டிகளை சுத்தப்படுத்தும் சமயம் ஆகும். எழுந்து உன் தீவட்டிகளை சரிபடுத்து - இது ஏழாம் ஜாமத்தில் உரைக்கப்பட்டது. இது தீவட்டியை சரிப்படுத்தும் நேரம். இது மல்கியா 4ம் அதிகாரத்தின் நேரம். இது. லூக் 17ம் அதிகாரத்தின் நேரம்.

இரண்டாவதாக, உயிரோடெழுப்பும் சத்தம். யோ.11:38-44ல் லாசருவை கல்லரையை விட்டு வெளியேவரும்படி அழைத்த அதே சத்தம் அதாவது கிறிஸ்துக்குள் மரித்தவர்களை உயிரோடெழுப்பும் சத்தம்.

மூன்றாவதாக எக்காளம். எக்காளம் ஊதப்பட்டு, ஜனங்கள் விருந்துக்கு அழைக்கப்படுகின்றனர். அதுதான் ஆட்டுக்குட்டியானவர் மணவாட்டியுடன் ஆகாயத்தில் நடத்தும் விருந்தாகும்.

முதலாவதாக மணவாட்டியை ஒன்று சேர்க்க அழைக்கப்படும் செய்தி. இரண்டாவதாக முன்காலங்களில் நித்திரை அடைந்துள்ள மணவாட்டியை உயிரோடெழுப்புதல். கடைசியாக நிகழ்வது எக்காளம். ஆகாயத்தில் நடக்கும் விருந்துக்காக உயிரோடெழும்பின மணவாட்டியும், உயிரோடுள்ள மணவாட்டியும் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் - பழைய பதிப்பு பக்கம் 40 பத்திகள் 2-5, பக்கம் 43 பத்தி 1, பக்கம் 46 பத்திகள் 3-5. செய்தி நாள் 4.12.1965).

ஆ. ஆண்டவரே, ஒருநாள் வானத்தில் இருந்து ஒரு சத்தம் உண்டாகும்.

அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் உயிரோடெழுந்திருப்பார்கள் அதாவது முன்பிருந்த சபை காலங்களின் பரிசுத்த வான்கள் உயிரோடெழுந்து தங்கள் கல்லறைகளை விட்டு வெளியே வருவார்கள்.

அப்பொழுது உயிரோடிருக்கும் நாமும் அவர்களுடன் அணிவகுத்து ஆகாயத்துக்குள் செல்லுவோம்.

அழிவுள்ள சரீரங்கள் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பாக மறுரூபப்படும்

எடுத்துக் கொள்ளப்படுதலாவது நம் முன்னிருக்கும் இந்நாட்களில் பரலோகத்தை நோக்கி புறப்படும் அக்காட்சி எத்தகைய பவனியாய் இருக்கும். வரப்போகும் அந்த எடுத்துக்கொள்ளப்படுதலின் நேரத்திற்காக நாம் ஆவலுடன் எதிர்நோக்கியிருக்கிறோம். (ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல் பக்கம் 54 பத்தி 2,3. செய்தி நாள் 4.12.1965).

இ. வானத்தில் பறந்துகொண்டிருக்கும் அந்த தட்டுகள் - அவைகள் பறக்கும் தட்டுகள் என்று அழைக்கின்றனர்... அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிறவர்கள்) எவ்விதம் காணாமல் போய் விடுகின்றனர்... அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விடுகின்றனர். அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும் அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக்கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள் இங்கு விடப்படும். அது ஒரு நொடிப்பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிலிருந்து கீழே இறங்கி வந்து அவர்களை கொண்டு செல்லும். (கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகிறார். பக்கம் 29 பத்தி 68. செய்தி நாள் 22.8.1965)

ஈ. நாம் உயிர்த்தெழும் போது நடப்பது யாவை?

* முதலாவது நடப்பது என்னவென்றால், உயிரோடிருப்பவர்கள் இங்கிருப்பார்கள்.

முதலாவதாக உயித்தெழுதல் நிகழும். நித்திரை அடைந்தவர்களின் உயிர்த்தெழுதல். நித்திரை அடைந்தவர்களை தட்டியெழுப்பும் நேரம்.

இப்பொழுது பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் - பாவத்தில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் அல்ல, அவர்கள் தொடர்ந்து நித்திரை செய்து கொண்டிருப்பார்கள். இன்னும் 1000 ஆண்டு காலம் வரைக்கும் அவர்கள் தொடர்ந்து நித்திரையில் இருந்து எழும்புவதில்லை.

ஆனால் கிறிஸ்துவுக்குள் மரித்து பூமியின் தூளில் நித்திரை செய்து கொண்டிருப்பவர்கள் முதலில் நித்திரையிலிருந்து எழுப்பப்படுவார்கள். அவர்களின் இந்த அழிவுள்ள சரீரங்கள் கர்த்தருடைய எடுத்துக்கொள்ளப்படும் கிருபையினால் அழியாமையைத் தரித்துக்கொள்ளும்.

* அதன் பிறகு நாம் எல்லோரும் ஒன்று கூடுவோம் அவர்கள் ஒன்று கூடத் தொடங்கும் போது உயிரோடிருக்கிற நாம் மறுரூபப்படுவோம். இந்த அழிவுள்ள சரீரங்கள் மரணத்தை காண்பதில்லை ஆனால் சடுதியாக, நம்மை வேகமாக அடித்துக்கொண்டு செல்வது போன்று ஒன்று உண்டாகும் அப்பொழுது நீங்கள் மறுரூபமடைவீர்கள்

* நீங்கள் ஆபிரகாமைப்போல் வயோதிபனிலிருந்து வாலிபனாகவும், வயோதிப ஸ்திரியிலிருந்து வாலிப ஸ்திரியாகவும் மாறிவிடுவீர்கள். இந்த சடுதியான மாற்றம் என்ன? சற்று கழிந்து நீங்கள் சிந்தனையைப் போல் பிரயாணம் செய்வீர்கள்.

* அப்பொழுது நீங்கள் ஏற்கனவே உயிர்த்தெழுந்தவர்களை காணமுடியும்.

* அதன்பிறகு நாம் அவர்களுடன் ஒன்று சேர்ந்து, அவர்களோடே கூட எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்போம்.(கேள்வி பதில் 240 COD 2:19 பக்கம் 27 பத்தி 58)

ஊ. இதை ஞாபகம் கொள்ளுங்கள். ஈசாக்கு தன் கூடாரத்தை விட்டுப் புறப்பட்டு வந்து பிற்பகலில் வயலில் தியானித்துக் கொண்டிருந்தான். ஆமென். ரெபேக்காள் வருவதை அவன் கண்டபோது... அவள் அவனைக் கண்டதில்லை அவனும் அவளைக் கண்டதில்லை. அது முதற்பார்வையிலே அன்பு. அவள் அவன் மேல் அன்பு கொண்டாள். அவனும் அவள் மேல் அன்பு கொண்டான். அவள் திரையிட்டு முகத்தை மறைத்தாள். ஆமென்

கவனியுங்கள், அவள் அவனைக் கண்டபோது, அவள் இருதயம் மகிழ்ச்சியினால் பொங்கினது. அவள் யாரை விவாகம் செய்து கொள்ளப் போகிறாள் என்று அறிந்திருக்கவேயில்லை. ஆனால் விசுவாசத்தில் புறப்பட்டுச் சென்றாள் ஆமென்.

And – and – and remember, Jesus will leave the Kingdom, and we'll not meet Him in Glory, we're to meet Him in the air, between heavens and earth, where it's expanded to redeem us. And he met Rebekah in the middle, between her home and his home. Amen. (சாத்தான் இந்த முக்கியமான பகுதியை தமிழ் மொழி பெயர்ப்பில் மறைத்து விட்டான். ஏனென்றால் தமிழ் மொழி பெயர்ப்பு அவன் பங்காளியாகிய ஸ்ரீ குருதேவ் லஹரி கிருஷ்ணாவின் முன்னாள் மணவாட்டிகளாலும், பிரன்காம் கிறிஸ்துவின் மணவாட்டிகளாலும் நடைபெறுகிறது. ஆதலால் தான் தீர்க்கத்தரிசியின் செய்திகளின் தமிழ் மொழி பெயர்ப்புகளில் எங்கும் ஒரே குழப்பம். இவர்கள் பாலாசீர் வாரியையும், வி.ம பிரன்காமையும் தங்கள் தலையாக ஏற்றுக்கொண்டவர்கள் தானே. ஆனால் கிறிஸ்துவின் மணவாட்டி ஒரு தலையை மாத்திரமே ஏற்றுக்கொள்வாள். அவர்

தான் கிறிஸ்து. கிறிஸ்துவைத் தவிர வேறு எந்த தலையையும் ஏற்றுக் கொள்ள மாட்டாள். Bride of Christ, would recognize *one head ship* that is Lord Jesus Christ. சகோ. எட்வின்கலுக்கு இது வெட்கம். இந்தியாவில் தீர்க்கத்தரிசியின் செய்தி இரண்டாம் தரம் செய்தியாக மாறியதின் பெருமை இவரையே சாரும்.) அவன் அவளை வீட்டுக்கு அழைத்துச் சென்று, விவாகம் செய்து கொண்டு, தன் தகப்பனுக்கிருந்த சர்வத்துக்கும் சுதந்திரவாளியானான். ஆமென். ஓ, பரிபூரணமாயுள்ளது. மிகவும் பரிபூரணமாயுள்ளது (கேள்வி பதில் 363 COD 2-21 பத்தி 256, 257 நாள் 30.8.1964).

24. எடுத்துக் கொள்ளப் படுதலுக்குப் பிறகு நடப்பதென்ன?

அ. மணவாட்டி பூமியிலிருந்து எடுத்துக் கொள்ளப்பட்டப் பிறகு புறஜாதி சபைக்கு எல்லாமே முடிவடைந்து இருக்கும்.

ஆ. தேவ ஆவியானவர் பூமியை விட்டு போய்விடுகிறார். அசுத்தமாயிருக்கிறவர்கள் இன்னும் அசுத்தமாயிருக்கட்டும், நீதியுள்ளவர்கள் இன்னும் நீதி செய்யட்டும், பரிசுத்தமுள்ளவர்கள் இன்னும் பரிசுத்தமாகட்டும் வெளி.12:11

இ. கிறிஸ்து பரிசுத்த ஸ்தலத்தை விட்டுப்புறப்பட்டுச் சென்று, மீட்பின் புத்தகத்தை வாங்கிக்கொண்டு அவர் மீட்டுக் கொண்ட எல்லாவற்றையும் உரிமை கோரிப் பெற்றுக்கொள்கிறார். மத்தியஸ்த ஊழியம் அதன் பிறகு கிடையாது. (கேள்வி பதில் 306: COD 2-20 பத்தி 173 நாள் 23.8.1964)

ஈ. After the RAPTURE has been taken place will any of church be saved in the end who was not taken in the rapture?

No, you see, there will be no intercessions – the gentile age is finished. There will be no one saved after the rapture, none of the church. (Q & A 207 Para 238 dated 24.3.1963).

25. சகோ.பிரன்காமே, சபைக்காலம் லவோதிக்கேயா முடிந்து விட்டது என்று நீங்கள் அண்மையில் எப்பொழுதாகிலும் கூறினதுண்டா?

இல்லை, அது முடிவடைந்து விட்டது என்று நான் ஒருபோதும் கூறினதில்லை. அவ்விதம் நான் கூறியிருந்தால் அதை தவறாக கூறினேன். அல்லது நீங்கள் அதை தவறாக புரிந்து கொண்டிருப்பீர்கள். இது கடைசி சபை காலம். இது சபை காலங்களின் முடிவாகும். இந்த லவோதிக்கேயா இன்னும் முடிவடையவில்லை. அது முடிவடைந்தால் சபை போய்விடும். சபை இங்குள்ள வரைக்கும் அது முடிவடையவில்லை.

மணவாட்டி சபையை விட்டு எடுக்கப்படும்போது, சபைக்காலம் முடிவடையும். லவோதிக்கேயா குழப்பத்துக்குள் செல்லும் மணவாட்டி மகிமைக்குச் செல்லுகிறாள். புத்தியில்லாத கன்னிகைகளின் மேல் முன்றரை ஆண்டுகள் உபத்திரவ காலம் வந்திறங்கும். (கேள்வி பதில் 391 & 392 COD 2-22 பத்தி 74 & 75 நாள் 30.8.1964.)

26. எபே 1:3 குறித்து உங்களை ஒருவனும் வஞ்சியாத படிக்கு பார்த்துக் கொள்ளுங்கள் :

அ. "நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் பிதாவாகிய தேவனுக்கு ஸ்தோத்திரம். அவர் கிறிஸ்துவுக்குள் உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார்". உன்னதங்களிலே, உன்னதங்கள் என்பது என்ன? இது கிறிஸ்துவில் ஒரு விசுவாசி பெற்றுள்ள ஸ்தானம். விசுவாசி கிறிஸ்துவுடன் எங்கு நின்று கொண்டிருக்கிறான் என்பது. (கிறிஸ்து தேவனுடைய பரம இரகசியத்தின் வெளிப்பாடு. பக்கம் 42 பத்தி 3)

ஆ. கிறிஸ்து இயேசுவுக்குள்ளான நாம் ஒன்றாக கூடி வருகையில், விசுவாசிகள் தெரிந்து கொள்ளப்பட்ட சபையாக, வேறு பிரிக்கப்பட்டவர்களாக கூடி வருகையில், அவர் நம்மை உன்னதத்தின் எல்லா கிருபையாலும், ஆசீர்வாதங்களினாலும் ஆசீர்வதித்திருக்கிறார். அவர் நம்மை தமது பரிசுத்த ஆவியாலே முத்திரையிட்டு எதிர்காலத்தில் நிகழப்போகும் அனைத்துக் காரியங்களைக் குறித்தும் இப்பொழுது நமக்கு வெளிப்படுத்திக் கொண்டிருக்கிறார்.(இயேசு கிறிஸ்துவைப் பற்றிய வெளிப்படுத்தல். பாகம் 2 பக்கம் 1229 பத்தி 97).

இ. Blessed us with all spiritual blessings in heavenly places in Christ – assembled together now in heavenly places in Christ Jesus. I believe that I am in Christ. If you are, you have received the Holy Ghost, because that is the only way that you can get into Christ. 1 Cori. 12 : 13. There we sat together in heavenly places in one accord, Holy Spirit moving among us, teaching us, showing us great things, bringing things to pass. (Q & A 103 Para 496)

ஈ. உன்னதங்களிலே ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களினாலும் நம்மை ஆசீர்வதித்திருக்கிறார். உன்னதங்களிலே, எங்கோ ஓரிடத்தில் அல்ல. உன்னதங்களில். நாம் உன்னதங்களில் ஒன்று கூடுகிறோம். அதுதான் விசுவாசியின் ஸ்தானம். நாம் வெளியே அழைக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை பெற்றவர்களாய், தேவனுடைய ஆசீர்வாதத்தினால் நிறைக்கப்பட்டு, அதற்கென்று தெரிந்து கொள்ளப்பட்ட *பரிசுத்தவான்களாக ஒன்று கூடி. இப்பொழுது உன்னதங்களில் உட்கார்ந்து கொண்டிருக்கிறோம். நமது ஆத்மாவில் நாம் பரலோகத்தை சேர்ந்தவர்களாய் இருக்கிறோம். நமது ஆவி நம்மை பரலோகத்தின் குழ்நிலைக்குக் கொண்டு வந்துள்ளது. ஓ சகோதரனே. பரலோகத்தின் குழ்நிலை*. (புத்திர சுவீகாரம் பாகம் 1 பக்கம் 30 பத்தி 92)

உ. You that sets in Heavenly Places in Christ Jesus, been blessed together with all spiritual blessings, the gifts of God manifesting. Divine healing, prophecies, everything going further. (Israel & the Church, Part I, page 9, Para 56)

பிரியமானவர்களே, இந்த 5 பத்திகளையும் வாசித்த பின்பு கிரிஸ்துவுக்குள் உன்னதங்களிலே என்பதன் அர்த்தத்தை நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்கள் என நினைக்கிறேன். இதற்கு மறு விளக்கம் தேவையில்லை. ஆதலால் எபே. 1:3 ஐ சுட்டிக்காட்டி மணவாட்டி 1963ல் எடுத்துக்கொள்ளப்பட்ட பிறகு தற்போது உன்னதங்களில் வீற்றிருந்து கிறிஸ்துவோடு இருக்கிறாள், இந்த பூமி தான் ஆகாயம் போன்றதான மாயையான உபதேசங்களுக்கு செவி கொடாதிருங்கள்.

27. ஏழாம் சபை கால தூதன் 12.12.1965ல் இராப்போஜனம் என்ற தலைப்பில் செய்தி கொடுத்து " நம் சரீரப்பிரகாரமாக ஆசரிப்பதற்கு மூன்று தெய்வீக நியமங்கள் நமக்கு அளிக்கப்பட்டுள்ளன, அவைகளில் ஒன்று இராப்போஜனம் மற்றவை கால்களைக் கழுவுதல், தண்ணீர் ஞானஸ்நானம். இம்மூன்று மாத்திரமே. மூன்று பரிபூரணத்துக்கு எடுத்துக்காட்டு " என்கிறார். (பக்கம் 7 , பத்தி 17) இவர் இந்த தெய்வீக நியமனங்களை 1963ல் நிறுத்தவில்லை. இராப்போஜனத்தை 1965ல் கிறிஸ்துவுக்குள் நித்திரையடையும் வரை ஆசரித்துக்கொண்டு வந்தார். கிறிஸ்து மீட்பின் புத்தகத்தை வாங்கிக்கொண்டு, அவர் மீட்டுக்கொண்டவர்கள் மீது இன்னும் உரிமை கோரவில்லை. ஆதலால் தண்ணீரை தடைசெய்யாதீர்கள். நீங்கள் கர்த்தருடைய இராப்போஜனத்தை ஆசரிக்காவிட்டால் உங்களுக்குள் நித்திய ஜீவன் இல்லை ஒருவர் கால்களை ஒருவர் கழுவாவிட்டால் உங்களில் ஒருவரிடத்தில் ஒருவருக்கு பங்கு இல்லை.

28. முடிவாக, எடுத்துக்கொள்ளப்படுதல் 28.2.1963 அன்று ஏழு தூதர்கள் கூட்டம் வானத்திலிருந்து இறங்கின போது நடந்துவிட்டது, லவோதிக்கேயா சபை காலம் முடிந்துவிட்டது, நாம் இப்பொழுது கிறிஸ்துவுடன் உன்னதங்களில் அதாவது பரலோகத்தில் வீற்றிருப்பதனால் இனி ஞானஸ்நானம், கர்த்தருடைய இராப்போஜனம், கால்களை கழுவுதல், உபவாசம், ஜெபம் தேவை இல்லை போன்ற போதகங்கள் பரத்திலிருந்து இறங்கிவருகிற ஞானமாயிறாமல் லௌகீக சம்பந்தமானதும், பேயத்தனத்துக்கடுத்ததுமாய் இருக்கிறது. லௌகீக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொள்ளைக்கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள். அவர்களுடைய வார்த்தை அரிபிளவையைப் போலப் படரும்: இமெநேயும் பிலேத்தும் அப்படிப்பட்டவர்கள்: அவர்கள் சத்தியத்தை விட்டு விலகி, உயிர்த்தெழுதல் நடந்தாயிற்றென்று சொல்லி, சிலருடைய விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள். 11 தீமோ. 2.17,18. அன்றுபோல, இன்று, தங்களை பாஸ்டர் என அழைத்துக் கொள்ளும் கள்ளப்போதகர்களான ஜெயராஜ் (புதுக்கோட்டை), மணி (நெல்லை - டவுண்), எட்வர்ட் (சென்னை) உங்கள் விசுவாசத்தைக் கவிழ்த்துப்போடுகிறார்கள். அவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவுக்கு ஊழியம் செய்யாமல் தங்கள் வயிற்றுக்கே ஊழியம் செய்து, நயவசனிப்பினாலும், இச்சகப்பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். லூசிபர் முதன்முறையாக ஏதேன் தோட்டத்தில் செய்த அதே காரியத்தையே இப்பொழுதும் செய்து வருகிறான். தேவனுக்கும் உங்களுக்கும் உள்ள ஐக்கியத்தை சீர்குலைக்க வகைதேடித்திரிகிறான். ஆதலால் பிசாசுக்கு எதிர்த்து நில்லுங்கள். அப்பொழுது உங்களை வேறுவிதமாய் சிந்திக்கவைத்து கலக்குகிறவன் உங்களை விட்டு ஓடிப்போவான். உங்களைக் கலக்குகிறவன் எப்படிப்பட்டவனாயிருந்தாலும் தனக்கேற்ற ஆக்கினையை அடைவான்.

நீங்களோ பிரியமானவர்களே, உங்கள் மகாபரிசுத்தமான விசுவாசத்தின்மேல் உங்களை உறுதிப்படுத்திக் கொண்டு, பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெற காத்திருங்கள். நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபை உங்கள் ஆவியுடனே கூடஇருப்பதாக. ஆமென்.

ஆகஸ்ட், 2000

கிறிஸ்துவின் அன்பில்,
சகோ. காலேப் யோசுவா.